காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதி சாலவாக்கம் ஒன்றியம் அரும்புலியூர் ஊராட்சி கரும்பாக்கம் கிராமத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவையொட்டி திமுக கழக கொடியேற்றும் நிகழ்ச்சி மற்றும் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை ஆர்.காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ. கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு திமுக கட்சி கொடியினை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு உணவு வழங்கினர். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், ஒன்றியச் செயலாளர் டி.குமார், ஒன்றிய குழு துணை தலைவர் வசந்தி குமார், அரும்பொலியூர் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கட்ராமன், அறநிலையத்துறை குழு உறுப்பினர் எஸ்.ஆர்.வெங்கடேசன், அவைத் தலைவர் என்.எஸ்.ரவி, பொருளாளர் பாலமுருகன், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், கிளைச் செயலாளர் கோவிந்தராஜ், விஷ்ணு, முரளி ஜெயபூரி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சுந்தரமூர்த்தி, கோதண்டராமன், சரவணன், மஞ்சுளா மோகன், தர்மராஜ் ஆகியோர் உள்ளனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,தாம்பரம் மாநகரம் பம்மல் வடக்கு,பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் எஸ்.எஸ். மண்டபத்தில் மண்டலம் குழுத் தலைவர்,பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநி தலைமையில் பம்மல் வடக்கு பகுதி கழக செயலாளர் திருநீர்மலை த.ஜெயகுமார் வரவேற்புரையில் பகுதி கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் குறுசிறு நடுத்தர தொழில் நிறுவங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன்,இ.கருணாநிதி எம்.எல். ஏ.எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றினர். உடன் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன், மாநகர துணை செயலாளர் இரா.நரேஷ்கண்ணா, எல்.பிரபு,வி ரவிச்சந்திரன்,பி.கே.வி.சத்தியபிரபு உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஏ.செந்தில்குமார்,எஸ்.வெங்கடேசன்,எம்.சுரேஷ்குமார் நன்றி கூறினர்.

### 77வது ஆண்டு

# இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் மாநாடு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜன. 24-*

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.01.2025) சென்னையில் நடைபெறும் இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் 77வது ஆண்டு மாநாட்டினை தொடங்கி வைத்து விழா பேருரையாற்றினார்கள்.

அவர் ஆற்றிய உரை வருமாறு:

கதிரியக்க கருவிகளின் பணியானது நோய் மற்றும் காயங்களின் தன்மையினை கண்டறிதல் ஆகும். மேலும் அதன் தன்மைக்கு ஏற்ப சிகிச்சை அளிப்பதன் மூலம் சிறந்த சிகிச்சை அளிக்க முடியும். எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ அல்ட்ரா சவுன்ட் போன்ற முறைகளை உள்ளடக்கியது. மருத்துவக் கதிரியக்கத் துறையில் பல்வேறு புதிய முறைகளை கண்டு பிடிப்பது மற்றும் கையாள்வது போன்ற கருத்துகளை விவாதிப்பதற்காக இந்த மாநாடு இங்கு கூடி உள்ளது. இந்த மாநாட்டை நடத்துகின்ற இந்தியன் ரேடியாலஜிக்கல் மற்றும் இமேஜிங் அசோசியேசன் என்பது ஆசிய மற்றும் ஓசானியன் சொசைட்டி ரேடியாலஜியின் *Asian Oceanian Congress of Radiology (AOCR)* ஒரு உறுப்பினர் ஆகும். இந்த AOCR பல்வேறு தளங்களில் அறிவு பரிமாற்றம் நடக்கும் வகையில் இத்தகைய மாநாட்டினை ஆண்டுதோறும் நடத்துகிறது. சென்னையில் நடக்கும் இந்நிகழ்வு என்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது, ஏனென்றால் மிக பழமையான பெர்னார்ட் கதிரியக்க நிறுவனம் சென்னையில் தான் ஆரம்பிக்கப்பட்டது.

**மாநாட்டின் சிறப்புகள்**

இந்தியா மற்றும் ஆசியாவின் மிகப்பெரிய சர்வதேச மாநாடு. ஆசியாவின் மிகப்பெரியதும் மற்றும் உலகின் 3வது பெரிய மாநாடு. இந்தியன் ஜர்னல் ஆப் ரேடியாலஜி அன்டு இமேஜிங் எனும் புதிய இதழை வெளியிடுதல். மாநாட்டில் அறிவியல் சுருக்கத்தினை வெளியிடுதல் ஆகியவை உள்ளடக்கிய முக்கிய நிகழ்வில் நான் பங்கேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். வரும்முன் காப்பதே சிறந்தது எனும் பொன்மொழிக்கு ஏற்ப கலைஞரின் வரும்முன் காப்போம் திட்டம் -1999 ஆம் ஆண்டு, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.09.2021 அன்று கலைஞர் வரும்முன் காப்போம் திட்டம் மீண்டும் புதுப் பொலிவுடன் தொடங்கி வைக்கப்பட்டு, 25 வகையான பரிசோதனைகளுடன் அல்ட்ராசோனோகிராம், டிஜிட்டல் எக்ஸ்ரே போன்ற அதி நவீன கருவிகளும் சேர்க்கப்பட்டு, ஏழை எளிய மக்கள் பயன் பெறும் வகையில் கிராமங்களுக்கே சென்று முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

**PET CT ஸ்கேன் வசதி**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, புற்று நோயையை ஆரம்ப நிலையிலேயே கண்டறிய உதவும் PET CT ஸ்கேன் வசதி தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதி மக்களும் அணுகும் வகையில் 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்பட்டது. இதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய மக்கள் தங்களுக்கு அருகிலேயே உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளிலேயே PET CT ஸ்கேன் வசதியை பெற்றுக்கொள்ள முடியும். மேலும் அனைத்து மாவட்டங்களுக்கும் PET CT ஸ்கேன் வசதியை கொண்டு வர பல்வேறு முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. மேலும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் 43 MRI Scan மற்றும் தாலுகா அரசு மருத்துவமனைகள் உட்பட 136 சிடி ஸ்கேன் கருவிகள் ஆகிய நவீன மருத்துவ உபகரணங்கள் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகைய நவீன உயிர்காக்கும் சிகிச்சைகள் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு ஏழை, எளிய மக்கள் கட்டணமின்றி இச்சேவைகளை பெரும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த மாநாடு, ஏழை எளிய மக்களும் பயன்பெரும் வகையில் நவீன உபகரணங்களைக் கொண்டு, நோய் வரும்முன், நோயின் தன்மையினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து நோய்வராமல் தடுப்பது என்கிற நோக்கத்தை எவ்வாறு செயல்படுத்துவது மற்றும் நவீனப்படுத்துவது என்பதை விவாதித்து அரசுக்கு ஆலோசனை வழங்கவும், உறுதுணையாக இருக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் முன்னாள் இயக்குநர் பத்மஸ்ரீ டாக்டர்.மயில்சாமி அண்ணாதுரை, இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.என்.வரபிரசாத், இந்திய கதிரியக்க மற்றும் இமேஜிங் சங்கத்தின் புதிதாக பதவியேற்ற தலைவர் டாக்டர்.குர்தீப் சிங், மாநாட்டின் விழா ஒருங்கிணைப்பு தலைவர் டாக்டர் சி.அமர்நாத், மாநாட்டின் விழா ஒருங்கிணைப்பு செயலாளர் டாக்டர் எல். முரளி கிருஷ்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

## பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. அறிக்கை!

*சென்னை, ஜன.24-*

பகுதிச் செயலாளர் - 12-வது மண்டல குழு தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் நாளை (25.01.2025 சனிக்கிழமை) வீர வணக்க நாள் பொதுக் கூட்டத்திற்கு பல்லாவரம் வருகை தர இருப்பதால், ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 12-வது மண்டல குழு தலைவர், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளர் என். சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### சென்னை வடக்கு மாவட்ட மகளிரணி துணைத் தலைவர் இராயபுரம்

# ஆர்.குருவம்மாள் மருத்துவமனையில் அனுமதி!

*சென்னை, ஜன. 24 -*

சென்னை வடக்கு மாவட்ட மகளிரணி து.தலைவர் இராயபுரம் ஆர் குருவம்மாள் சில நாட்களாக உடல்நலக்குறைவு காரணமாக அவதிப்பட்டு வந்தார் . சென்னை புரசைவாக்கம் ஆதியப்ப முதலி தெருவில் உள்ள நோபல் மருத்துவமனையில் நேற்று காலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கபட்டார். அவருக்கு டாக்டர்கள் சிகிச்சை அளித்து வருகின்றார்.

இவரது புதல்வர் ஆர். ராஜன் சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளராக உள்ளார்.

### இரா.லட்சுமணன் தலைமை! ஜே.ஜே.எபினேசர், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன் முன்னிலை!

# ஆர்.கே.நகர் கிழக்கு - மேற்கு பகுதி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## வாகை சந்திரசேகர் சிறப்புரை! ஆர்.டி.சேகர், புலவர் சாமி நாகப்பன், கலாநிதிவீராசாமி, ஐட்ரீம் மூர்த்தி பங்கேற்பு!

*சென்னை ஜன.24-*

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு மேற்கு பகுதி சார்பில் மொழிப்போரில் இன்னுயிர் நீத்த தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நாளை (25.01.2025 சனிக்கிழமை) மாலை 6.00 மணியளவில் ஏ.இ.கோயில் தெரு புது வண்ணை செ81ல் நடைபெறுகிறது.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா. லட்சுமணன் தலைமை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம். எல்.ஏ,பகுதி செயலாளர்கள் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன்,க.ஜெயராமன், வ.பெ.சுரேஷ், அ.முருகன், இரா.செந்தில்குமார், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.அனிபா, ஆர். டி.ராஜா,கே.பாலு, எம். வேதலட்சுமி, கே.பி.சதிஷ் குமார், மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், எம்.லோகநாதன், டி.திராவிடசெல்வி, பி.சீனிவாசன், என்.எம். கதிரேசன், தா.வ.மு.கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜ்,ப.குமார், ச. தமிழ்செல்வன், பொ.து. ராஜா, ஜெ.பிரேம்ஆனந்த், நேதாஜி யு.கணேசன் எம். சி, எஸ்.எல்.சுந்தர், கே. தேவன், ஆர்.ஏ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர். ராஜன்,

வெ.சு.சத்தியநாராயணன், மோ.ரவிக்குமார், பிரசிடென்சி சி.சதிஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சத்தீஸ்வரி, ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் இயல் இசை நாடாக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர், மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ,. தலைமை கழக பேச்சாளர் புலவர் சாமிநாகப்பன்,டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

தா.இளையஅருணா, ந.மனோகரன், இரா.கருணாநிதி, இரா.மதிவாணன், பி.டி.பாண்டிசெல்வம், என்.மருதுகணேஷ், இரா.நரேந்திரன், ஆர். வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலகண்ணன், மு.கோபி, க. நாகம்மை, வி.தயாளன், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, வே.சிவக்குமார், கி. ராஜேந்திரன், டி.கமலக் கண்ணன்,ஏ.தமிழ்செல்வன், பா.மதிவாணன், க.அமலு,நா.சண்முகம், டி.வி.முத்துகிருஷ்ணன், த.தமிழ்கொடி,கு.நற்குணம், வண்ணைமோகன், ஏ.டி. மணி, சி.மணிகண்டன், எஸ்.எம்.பரசுராமன், வி.வி.ரமேஷ், ஆ.ரமேஷ் பாபு, வை.கலைவாணன், எம்.விமலா,ஆ.மோகன், லயன் எம்.தீனதயாளன், லியோ.டி.சுரேஷ், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமி வேலு, பி.செந்தில்குமார், த.சிவராமன், கே.கலையரசன், எம்.பி.டி.அப்துல்ரஹ்மான், வெ.இன்பரசன், கோ.சதீஷ், பி.பிரகாஷ், இர.பொன்இளவரசன், லயோலா கே.மதன், வை.கௌதமன், கட்பீஸ் ப.சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிகுமார், எம்.எம். சாமி, பி.கே.மூர்த்தி, ஜெ.சுரேஷ்பாபு, ஆர். ரமேஷ், கே.மோகன், சா.திருப்பதிசாமி, டி.ஆர். தணிகாசலம், வி.முத்து, பி.அன்பழகன், எம்.ரூப சங்கர், எஸ்.சொக்கலிங்கம், ஜி.ராஜா, டி.சங்கர், மீஞ்சூர் முகுந்தன், கே. ஜானகிராமன், எஸ்.ஜான் கென்னடி, தேவிகதிரேசன் எம்.சி, குமாரி நாகராஜன் எம்.சி, பவித்ராநரேஷ்குமார் எம்.சி, மணிமேகலை எம்.சி,மற்றும் சார்பு மன்ற நிர்வாகி கள் பாக முகவர்கள்,பாக பணியாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள்.

### விருகம்பாக்கத்தில்

# மொழிப்போர் தியாகி ஒய்.அரங்கநாதன் நினைவிடத்தில் வீரவணக்கம்!

## சென்னை தெற்கு மாவட்ட மாணவரணியினருக்கு - அமைப்பாளர் பா.அருண்குமார் வேண்டுகோள்!

*சென்னை, ஜன. 24-*

தீந்தமிழ் மொழி காக்க தங்கள் தேக்குமரத் தேகத்தை தீயின் நாக்குகளுக்கு இரையாக்கிய அத்தகைய வீரர்களின் நினைவுகளைப் போற்றுவதுடன் அடுத்து வரும் இளைய சமுதாயத்தினற்கும் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத்தின் சார்பில் தொடர்ந்து வீரவணக்கம் நாள் நிகழ்வு நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை 25-01-2024 (சனிக்கிழமை) காலை 8.00 மணியளவில் விருகம்பாக்கம் விநாயகம் தெருவில் அமைந்துள்ள தியாகி அரங்கநாதன் நினைவிடத்தில் வீரவணக்கம் செலுத்தப்படுகிறது.

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. பங்கேற்று அஞ்சலி செலுத்துகின்றனர்.

ஆகவே சென்னை தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள், கல்லூரி மாணவர்கள் பெரும் திரளாக கலந்து கொள்ளவேண்டுகிறேன்.

இவ்வாறு பா.அருண்குமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருநின்றவூர் நகர இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.பிரசன்னாவின் தந்தை பி.ஜோசப் அவர்களின் படத் திறப்பு நிகழ்வில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திருவுருவப்படத்தை திறந்து வைத்து மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், நகரக் கழகச் செயலாளர் தி.வை.இரவி, மாநில மாணவரணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.ஜெயபாலன், ஜி.விமல் வர்ஷன், ஜெ.மகாதேவன், பெ.வினோத், வி.தியாகராஜன், நிர்வாகிகள் அன்பழகன், எஸ்.நாகராஜ், ரவி, சி.பாபு, குணசேகரன், பி.எல்.ஆர்.யோகா, உள்பட கழக நிர்வாகிகள் வார்டு கழகச் செயலாளர்கள் கவுன்சிலர்கள் கழக மூத்த முன்னோடிகள் குடும்பத்தினர்கள் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.